IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ARNI, T.V.M.DT.

DEPOSITION OF WITNESS

(As per XXIII case of Criminal procedure)

<u>SESSIONS CASE NO. 70/2020</u>

Deposition of witness for prosecution : PW6

Defense :

Name : திரு.கே.பாஸ்கரன்

Father's Name : எல்லப்பன்

Village : கிராம உதவியாளர்

Taluk : வேலப்பாடி

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.02.2023

**<u>முதல் விசாரணை</u>**

**1 முதல் 4 எதிரிகள் ஆஜர். 5ம் எதிரி இறப்பு.**

1. நான் தற்போது வேலப்பாடி கிராம உதவியாளராக பணி புரிந்து வருகிறேன். நான் 2017ம் ஆண்டு ஆரணி நகர மேற்கு கிராம உதவியாளராக பணி புரிந்து வந்தேன்.

2. 13.06.2017 அன்று நானும், அ.சா.5ம் மதியம் மதியம் 12.30 மணிக்கு அலுவலக பணி சம்மந்தமாக காமராஜர் சிலை அருகே சென்றோம். மணிகண்டன், லோகேஷ் மற்றும் குமார் ஆகியோர்களை போலிசார் விசாரணை செய்துக் கொண்டிருந்தார்கள். போலிசார் லோகேஷை விசாரணை செய்து கையெழுத்து வாங்கினார்கள். நானும், கிராம நிர்வாக அலுவலர் லோகேஷூம் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தானா என்றால் சாட்சி 10 நிமிடங்கள் யோசித்து பின்னர் தன்னுடைய கையெழுத்தை அடையாளம் காட்டினார் அதன் பிறகு ஒப்பதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து யாருடையது என்று கேட்டபோது சாட்சி தான் ஒரு அரசு ஊழியராக இருந்தும் கிராம உதவியாளராக பணி புரிந்தும் கையெழுத்திடப்பட்ட பெயரை படித்து சொல்வதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் கால தாமதம் செய்து தவறான பெயர்களை நீதிமன்றத்தில் தெரிவித்து அதன் பிறகு ஹேமநாதன் கையெழுத்து என்று சாட்சி அளித்தார் . ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சி கையெழுத்து **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

காமராஜா் சிலை அருகிலிருந்து நேராக காவல் நிலையத்திற்கு தான் சென்றோம். என்னிடம் காட்டப்படும் கைபப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்தை காமராஜா் சிலை அருகே கைது செய்த சமயத்தில் போட்டேன் அந்த கைப்பற்றுதல் மகசரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது எனக்கு எழுதப்படிக்க தெரியாது. கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**அரசுதரப்பு வழக்கறிஞா் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரனை செய்ய அனுமதி கேட்டுக்கொண்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு அதனை தொடா்ந்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.**

1. மேற்படி நெம்பா் வழக்கில் போலிசாா் என்னை விசாரித்தபோது 13.06.2017 அன்று பகல் 12.00 மணி அளவில் அலுவலக வேலை விசயமாக காமராசா் சிலைஅருகேசென்றோம் என்றும் அப்போது ஆரணி நகரகாவல் ஆய்வாளா் 2 நபா்களைவிசாரித்துக்கொண்டிருந்தாா் என்றும் அவா்கள் இருவரும் ஹேமநாதன், மணிகண்டனை கொலைசெய்ய முயற்சி செய்ததாக ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாா் என்றால் சரியல்ல.

2. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளா் வி.எ.ஓ மற்றும் என் முன்னிலையில் பதிவு செய்தாா் என்றால் சரியல்ல.

3. பின்னா் ஹேமநாதன் மேற்படி சம்பவத்தின்போது பயன்படுத்திய கத்தியை எடுத்து ஆஜா்படுத்துவதாக கூறி ஆரணி ஆற்றங்கரை அருகே அழைத்து சென்றாா் என்றும் அங்கு செடி மறைவில் மறைத்து வைத்திருந்த கத்தியை ஹேமநாதன் எடுத்து ஆய்வாளரிடம் ஒப்படைத்தாா் என்றும் அவ்வாறு ஒப்படைத்த கத்தியை ஆய்வாளா் கைப்பற்றினாா் என்றும் அந்த கைப்பற்றுதல் மகசரில் நானும் கிராம நிா்வாக அலுவலரும் கையெழுத்து செய்தோம் என்றும் தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மைகளை மறைத்து பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை- இல்லை.